வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். RCOP 1/2021

வழக்கு சாட்சி RW2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முகேஷ்குமார் | ஜாதி | |
| கணவர்/தந்தை | ஏழுமலை | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 31 |

தேதி 02.07.2025

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

முதல் விசாரணை

**எதிர் மனுதாரர் எனது மனைவி._ நான் எதிர் மனுதாராருக்கு ஆதராவாக சாட்சியம் அளிக்கிறேன். எனது தரப்பு சாட்சியத்தினை எழுத்து மூலமான பிரமான வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். 23.04.2025 தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் பெறப்பட்ட பதில் ( அசல்) எ.த.சா.ஆ.11, 13.06.2025 நகர புல எண்.230/பகுதி புதிய புல எண்.224 கணினி வழி பதிவிறக்கம் எ.த.சா.ஆ.12 ஆக எதிர் மனுதாரர் தரப்பிற்காக ஆவணமாக குறியீடு செய்யப்படுகிறது. ( மனுதாரர் தரப்பில் மேற்படி ஆவணங்கள் இரண்டும் வழக்கிற்கு தொடர்பான ஆவணங்கள் இல்லை என ஆச்சேபனையானது எழுப்பப்பட்டது ) ஆட்சேபனையோடு இரண்டு ஆவணங்களும் குறியீடு செய்யப்படுகிறது.**

குறுக்கு விசாரணை

**நீதிமன்றத்திலிருந்து எனக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டதா என்றால் இல்லை. வழக்கறிஞர் கூறியதால் வந்தேன். மனுதாரர் மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தில் சி.ஆர்.பி.3339/2016**

தாக்கல் செய்தார் என்றால் ஆமாம். எதற்காக தாக்கல் செய்யப்பட்டது என்றால் திருவெற்றியூர் நீதிமன்ற எல்லைக்கு உட்பட்டது அல்ல என்பதற்காக தாக்கல் செய்தார். அதில் என்ன முடிவானது பிறப்பிக்கப்பட்டது என்றால் இரண்டு மாதங்களுக்குள் நீதிமன்ற எல்லைக்குள் வருகிறதா என்பதை தீர்மானம் செய்ய கூறப்பட்டது. பிரமாண வாக்குமூலத்தில் மட்டுமே அசல் மனுவில் எல்லையினை பொறுத்து ஆட்சேபனை எழுப்பாமல் தற்போது எழுப்பியுள்ளோம் என்றால் சரி அல்ல. எனது மனைவி பதில் மனுவில் அசல் மனுவினை விசாரணை செய்வதற்கு இந்த நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லை என கூறியுள்ளாரா என்றால் இல்லை. எ.த.சா.ஆ.11 தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் பட்டா, வரைபடத்தினை கோரியுள்ளோமா என்றால் பட்டா அந்த இடத்திற்கு இன்னும் தரவில்லை. எ.த.சா.ஆ.11-ல் புல எண் குறிப்பிடாமல் பிளாட் எண் மட்டுமே குறிப்பிட்டுள்ளோம் என்றால் ஆமாம். வழக்கு சொத்து இரண்டு புல எண்கள் என்றால் ஆமாம் 230 மற்றும் 61 புல எண்கள் ஆகும். 230, 61 எந்த கிராமம் என்றால் 61 மாத்தூர் கிராமம். 230 தெரியவில்லை. எ.த.சா.ஆ.12 என்ன கூறப்பட்டுள்ளது என்றால் 230 மாதவரம் அரசு பால்பண்ணைக்கு சேர்ந்தது. புல எண் 230, 61 இரண்டும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்காக அரசால் 2009ம் ஆண்டு கையகப்படுத்தப்பட்டுவிட்டது என்றால் எனக்கு தெரியவில்லை. புல எண் 230 அரசுக்கு சொந்தமான இடமா அல்லது மனுதாரருக்கு சொந்தமான இடமா என்றால அரசுக்கு சொந்தமான இடம். மனுதாரர் இம்மனு சொத்தின் உரிமையாளர் என்பதினை நான் மறுக்கிறேனா என்றால் ஆமாம். என்னுடைய பிரமாண வாக்குமூலம் ஆறாவது பத்தியில் வாதி என்னை மிரட்டியதாக நான் கூறியுள்ளேன் என்றால் ஆமாம். நான் கூறுவது தவறு என்றாலும் நான் தான் மனுதாரரை மிரட்டினேன் என மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுதாரர் Crl.O.P. 2633/2023 மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. மனுதாரர் இவ்வழக்கு சொத்தின் பெரும் பகுதி மாதவரத்திலும், சிறு பகுதி மாத்தூரில் வருவதாக வரைபடம் தாக்கல் செய்துள்ளார் என்றால் ஆமாம்.

புல எண் 230, 61 மனு தாக்கல் செய்யும் போதே மாதவரம் நகராட்சி எல்லைக்குள் உட்பட்டதாக இருந்தது என்றால் சரி அல்ல. எதிர் மனுதாரர் எனது மனைவி என்பதால் எனது சாட்சியத்தினை நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளதக்கது அல்ல என்றால் சரி அல்ல. என்னுடைய பிரமாண வாக்மூலம், ஆவணங்கள் இரண்டும் வழக்கிற்கு சம்பந்தமான ஆவணங்கள் அல்ல என்றால் சரி அல்ல. மனு சொத்து இந்த நீதிமன்றத்தின் அதிகார எல்லைக்குள் உட்பட்டது என்பதால் மனுதாரருக்கு ஆதரவாக தீர்வு ஏற்பட வேண்டும் என்றால் சரி அல்ல.